[1979 மார்ச் 31

சென்னைத் துறைமுகத்தில் இரும்புக்கல் ஏற்றுமதிப் பிரிவு.

*வினா எண். 577—திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை துறைமுகத்தில் இரும்புக்கல் ஏற்றுமதி பகுதியிலிருந்து பரவும் இரும்பு தூசியினால் சென்னை நகரில் இராயபுரம் பகுதி பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து மாநில அரசு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: (அ) ஆம்.

(ஆ) சென்னை துறைமுகக் கழகத்தலைவரை கேட்டுக் கொண்டதன் பேரில் தூசி பரவாதிருக்க அக்கற்களின் மேல் தண்ணீர் தெளிக்க ஏற்பாடு செய்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைத் துறைமுகத்தில் இந்த இரும்புக் கல் ஏற்றுமதியினால் சென்னை நகரமே பாழாகின்ற ஒரு அவல நிலை இருக்கிறது. அதோடு நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களும், முதல் அமைச்சர் அவர்களும் ஒரு நிகழ்ச்சிக்கு துறைமுகத்திற்குச் சென்றபோது, இதை நேரிலே அனுபவித்து வந்திருக்கிறார்கள். அவர்கள் சட்டைகள் கூட சிவப்பு நிறமாக மாறி விட்டதாகத் தெரிய வருகிறது. அது மட்டுமல்ல, சென்னையில் இருக்கக்கூடிய பெரிய கட்டிடமான எல்.ஐ.சி. கட்டிடம் கூட, இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடி வரையில் தூசியால் தாக்கப்பட்டு, அழுக்குப் படிந்திருப்பதாகத் தகவல் இருக்கிறது. அதோடு, நம்முடைய கட்டிடமும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் பெரும்பாலும் கோடை காலத்திலே பாதிக்கப்படும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியா அல்லது விவாதமா? சுருக்கமாகக் கேளுங்கள். நேரமில்லை.

திரு. ப. பொன்னுரங்கம்: கேள்விதான். இப்படி இந்தக் கல்லை ஏற்றுமதி செய்கின்றபோது, அதற்குப் பக்கத்திலே சவுத் இந்தியா பிளவர் மில் என்ற கோதுமை மாவு தயார் செய்யும் ஒரு பெரிய பாக்டரி இருக்கிறது.

1979 மார்ச் 31]

ஒரு சமயம் இரும்புக்கல் சத்து அதிலே கலந்தால் மக்களுக்கு நல்லது என்று கருதுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. தொடர்ந்து அந்த தூசி வருகிறது. அயர்ன் பர்த் ஆரம்பத்திலிருந்து எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் வெறும் தண்ணீரை மட்டும் சில சமயங்களில் தெளித்து வருகிறார்கள். ஆந்திராவில் இருக்கும் வைசாக்கிலும்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவ்வாறு கேள்வி நேரத்தில் நீண்ட விளக்கமாகப் பேசுவதை அனுமதிக்க முடியாது. சுருக்கமாகக் கேளுங்கள். பெரிய விளக்கங்கள் தேவையில்லை.

திரு. ப. பொன்னுரங்கம்: கண்ட்லா போர்ட்டிலும் வைசாக் போர்ட்டிலும் பாதுகாப்பு முறையில் கல் ஏற்றுமதி செய்யப்படுவதாகத் தெரியவருகிறது. அதே போன்று பாதுகாப்பான முறையில் கல் ஏற்றுமதி செய்ய இங்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மத்திய அரசாங்கததை வலியுறுத்த மாநில அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: அமெரிக்க தேசிய சுற்றுப்புற காற்று அழுத்த மிகுதியாக இதிலே தூசி கலந்திருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. காற்றில் அனுமதிக்கத்தக்க தூசி 3/220 மைக்ரோ கிராம் ஆகும். எனவே, தண்ணீர் தெளிப்பதோடு விளக்கெண்ணையும் கலந்து தெளிக்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டது. அதற்குப் பின்னால் இவைகள் பாதுகாப்பான முறையில் ஏற்றப்பட வேண்டுமென்பதற்காக நல்ல திட்டம் ஒன்றைத் தீட்டி அதன் வழியாக செயல்பட மத்திய அரசு ஒப்புதல் வந்தவுடன் 92 லட்சம் ரூபாய் செலவில் ஆவன செய்ய இருப்பதாக துறைமுகத் தலைவர் தெரிவித்திருக்கிறார். உரிய நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்கள்.

*வினா எண் 578— திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அடுத்த 5 ஆண்டுகளில் தமிழ்நாடு முழுவதும் கைத்தறி தொழில் கூட்டுறவுகள் ஏற்படுத்த மாபெரும் திட்டம் ஒன்றை அரசு வகுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?